## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம், புவியியற்றுறை
## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு –2015/ 16
## (February - 2018)

| | |
|---|---|
| இலங்கைப் புவியியல்<br>**GY :3123 Geography of Sri Lanka** | நேரம் : 3 மணித்தியாலம் |

பகுதி – I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக 05 வினாக்களுக்கு விடையளிக்குக.
எழுத்துத் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

### பகுதி – I

1.

i. இலங்கையில் மண் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்ட இரு அறிஞர்களின் பெயர்களை குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)

ii. விஜயன் தொகுதி மற்றும் உயர்நில கல்லியல் தொகுதியின் தனித்துவமான பண்புகளை சுருக்கமாக விபரிக்குக.
(08 புள்ளிகள்)

iii. இலங்கையின் தோற்றம் குறித்த வாடியா (Uwadia) மற்றும் பேராசிரியர் குலரத்தினம் ஆகியோரது கருத்துக்களை தர்க்க ரீதியில் ஆராய்க.
(10 புள்ளிகள்)

2.

i. இலங்கையின் உள்நாட்டு இடப்பெயர்வுப் பாங்கினை (pattern) சுருக்கமாக விபரிக்குக.
(03 புள்ளிகள்)

ii. இலங்கையில் இடப்பெயர்வினைத் தூண்டும் காரணிகளை உதாரணங்களுடன் விபரிக்குக.
(07 புள்ளிகள்)

iii. "இலங்கையின் சனத்தொகை மேல்மாகாணத்தில் அதிகளவில் செறிந்துள்ளமையானது பல்வேறுபட்ட சாதக பாதக விளைவுகளை "தோற்றுவிக்கின்றது". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்வதுடன் பாதக விளைவுகளை குறைப்பதற்கு நீர் முன்வைக்கக் கூடிய ஆலோசனைகளை தருக.
(10 புள்ளிகள்)

3.

i. இலங்கை எதிர்கொள்ளக்கூடிய வேறுபட்ட இயற்கை அனர்த்தங்கள் 06 இனைக் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

ii. இலங்கை வேறுபட்ட இயற்கை அனர்த்தங்களை எதிர்கொண்டு வருவதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகளை விபரிக்குக.
(07 புள்ளிகள்)

iii. இலங்கையில் 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் வெள்ளப் பெருக்கு அனர்த்தம் ஏற்படுத்தி வரும் தாக்கங்களின் இடரீதியான பரம்பல் குறித்து தரவுகளுடன் ஆராய்க.
(10 புள்ளிகள்)

## பகுதி – II

4.

**i.** இலங்கையின் காலநிலையில் செல்வாக்கு செலுத்தும் பௌதிக, மற்றும் வளிய காரணிகளை பட்டியலிட்டு சுருக்கமாக விபரிக்குக.

(08 புள்ளிகள்)

**ii.** இலங்கையின் வளிமண்டலத்தில் ஏற்படுகின்ற முக்கிய மாறுதல்கள பருவகாலங்களுடன் தொடர்புபடுத்தி விளக்குவதுடன், அண்மைக்காலங்களி மழைவீழ்ச்சி, மற்றும் வெப்பநிலையில் எத்தகைய போக்கு காணப்படுகின்ற என்பதனையும் உதாரணங்கள் தந்து விளக்குக.

(12 புள்ளிகள்)

5. இலங்கையின் விவசாயத்துறையில் ஏற்பட்டு வரும் நவீனப் போக்குகளை சுருக்கமா விபரித்து பொருளாதார மேம்பாடு, வறுமை ஒழிப்பு, தொழில் வழங்கல், ஆகியவற்றி விவசாயத்துறையின் வகிபங்கினை உதாரணங்களுடன் ஆராய்க.

(20 புள்ளிகள்)

6.

**i.** இலங்கையில் தெங்கு செய்கைக்கு பொருத்தமான சூழல் காரணிகளை சுருக்கமா விபரித்து அண்மைக்காலமாக இப்பயிர்ச்செய்கை எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளை ஆராய்க.

(10 புள்ளிகள்

**ii.** தென்னைப் பயிர்ச் செய்கையினை விருத்தி செய்வதற்கு இலங்கை அரசினா முன்னெடுப்பட்ட செயற்பாடுகளையும் நீர் முன்வைக்கக் கூடிய பரிந்துரைகளையு விபரிக்குக.

(10 புள்ளிகள்

7. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினுக்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.

I. இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்
II. மொறஹாகந்த நீர்த்தேக்கத் திட்டம்
III. இலங்கையின் வனவளம்

(10 x 2 = 20 புள்ளிகள்)